**அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - 2021**

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் | நிலுவைப் பணத்தை |

| | | |
|---|---|---|
| விநியோகிக்கப்பட்டிருந்த மருந்துகளுக்காக பெற வேண்டிய ரூபா 4,162,500 தொகை 2022 மே 27 ஆந் திகதி வரையிலும் அறவிட தவறவிடப்பட்டிருந்தது. | ஏற்படுத்தப்பட்டிருந்த செயலாற்றல் பிணைமுறி (Performance Bond) பிரச்சினையை தீர்ப்பதற்கு சில காலம் கடந்தமையால் இதுவரையிலும் 02 பட்டியல்களுக்குரிய ரூபா 4,162,500 மாத்திரம் அறவிட வேண்டியுள்ளமை. | அறவிடுவதற்கு தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 556,216,467 ஆன வியாபார கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 11,223,744 தொகை 01 முதல் 04 வரையான காலஎல்லையினை விஞ்சியிருந்த போதிலும் 2022 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆவணங்கள் கிடைக்காமை, கிடைத்துள்ள ஆவணங்கள் முழுமையற்று இருத்தல், உரிய சான்றுறுதிப்படுத்தல்கள் முழுமையற்று இருத்தல் மற்றும் சில பணிகள் இன்னும் நிறைவு செய்யப்படாமை ஆகியவற்றின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தவறியுள்ளமை. | கடன் கொடுத்தோர் உரிய காலத்தினுள் உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) 1983 இன் 12 இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் பிரிவு 06(2)(அ) | ஊழியர் முற்றாக சேவை செய்துள்ள ஒவ்வொரு ஆண்டிற்காக அரை மாதத்திற்கான சம்பளம் அல்லது வேதனம் அடிப்படையில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு பதிலாக ஊழியரின், முழு மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது | இது தொடர்பாக தொழிலாளர் சட்டத்தின் விதிகள் குறித்து தொழிலாளர் ஆணையாளரின் அறிவுறுத்தல்கள் எழுத்துப்பூர்வமாக பெறப்பட்டு, பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செயல்வழிக் கையேட்டின் அத்தியாயம் 2.3 இன் படி நிதிக் கையேட்டை அங்கீகரிக்க பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் | சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் பணிக்கொடை ஒதுக்குவதற்கும், செலுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு என ரூபா 1.33 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டடிருந்தது. | வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த கொடுப்பனவுகள் உள்ளடங்கிய நிதி கையேடு பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(2) | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 1,870,504 கூட்டுத்தொகையான காலாவதியான வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கோ அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய தரப்பினருக்கு அறிவித்து வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2009 நவம்பர் 13 திகதிய 438 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 105 | மீளாய்வாண்டினுள் ரூபா 3,837,426 கிரயமான மருந்து மூலப்பொருட்கள் 1,841 கிலோகிராம்கள் மற்றும் பொதியிடல் மூலப்பொருள் இருப்பு 865,376 அலகுகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்களை கண்டறிந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கு மேலதிகமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பயன்படுத்த முடியாத ரூபா 1,705,675 கிரயமான மூலப்பொருள் இருப்பு, ரூபா 1,886,980 கிரயமான புத்துருவாகும் வேலை இருப்புக்கள், ரூபா 152,142 கிரயமான பூர்த்தியான பொருள் இருப்புக்கள் உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கு மற்றும் அந்த இருப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டியவர்களை நிர்ணயிப்பதற்கு மற்றும் கடந்த வருடங்களில் பொருள் மெய்மையாய்வுகளில் | ரூபா 1,693,902 கிரயமான புத்துருவாகும் பொருள் இருப்பினை அழிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளமை, அந்த உருப்படிகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன் பொதியிடல் இருப்பு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கைதவிர்க்கப் பட்டுள்ளமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி சொத்துக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இனங்காணப்பட்டிருந்த ரூபா 3,855,964 கிரயமான நிராகரிக்கப்பட்ட மற்றும் சேதமான மூலப்பொருள் இருப்பினை புத்தகங்களிலிருந்து பதிவழித்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க நேர்ந்த நட்டம் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை நடாத்தி பொறுப்புக்கூற வேண்டியவரை நிர்ணயிப்பதற்கும் குறித்த நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | 1997 பெப்ரவரி 03 திகதிய 6/97 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 2 | பதில் கடமைக்கான காலம் ஆகக் கூடியது 3 மாத காலமாக இருந்த போதிலும், பிரதி பொது முகாமையாளர் பட்டியல் மற்றும் ஆய்வு பதவிக்காக தொடர்ச்சியாக 04 வருடங்களை விட மிகையான காலம் பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிந்தார். | பிரதி பொது முகாமையாளர் பட்டியல் மற்றும் ஆராய்ச்சி பதவியில் சேவையாற்றும் பெண் உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகியமையால் அந்த பிரிவின் முகாமையாளராக சேவையாற்றும் உத்தியோகத்தர் பதிற்கடமைக்கு நியமிக்கப்பட்டமை, அந்த பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் தகைமையுடைய எந்த விண்ணப்பதாரியும் விண்ணப்பித்திருக்க வில்லை என்பது, 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள துடன் ஆட்சேர்ப்பிற்கான அங்கீகாரம் கிடைத்தவுடன் உடனடியாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளப்படும் என்பது. | - மேற்படி - |
| (உ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது | ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்தக்கூடிய உச்ச இடர்கடன் தொகை ரூபா 250,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய | பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கையேட்டின் 2.3 ஆம் அத்தியாயத்தின் | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாகச் சுற்றறிக்கை | போதிலும் மீளாய்வாண்டின் 107 உத்தியோகத்தர் களுக்கு அந்த எல்லையினை விஞ்சி ரூபா 13,656,100 செலுத்தப்பட்டிருந்தது. | பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேடும் அங்கீகரிக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளமை மற்றும் இந்த கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளமை. | கோவை மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் நிறுவனத்தின் நிர்வாகம் தொடர்பிலான வழிகாட்டியின் 4.3 ஆம் பந்தி | நிறுவனத்தின் வியாபார செயற்பாடுகள், நிதி மற்றும் நிதியல்லாத அபாயங்களின் தாக்கங்களை கணிப்பிடுதல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு தாக்கமளிக்கும் அபாயங்களை குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக கூட்டுத்தாபனத்தினால் இடர்முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 மே 30 ஆந் திகதி வரையிலும் அக்குழு நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக இக்குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ 03/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வருடாந்தம் ரூபா 13,500 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவு மாத்திரம் செலுத்தக்கூடியதாக இருந்த போதிலும் அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்காக ஒரு ஊழியருக்கு மாதாந்த சம்பளமாக ரூபா 14,720,810 ஆன விசேட ஊக்குவிப்பு படிகளும் ஒரு ஊழியருக்கு ரூபா 5,000 அல்லது ரூபா 10,000 படி ரூபா 3,017,229 ஆன தொகையில் தலைவர் ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சியும் முறையான அங்கீகாரம் இன்றியும் மீளாய்வாண்டினுள் ஊக்குவிப்பு படிகளாக ரூபா 17,738,039 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கையேட்டின் 2.3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு நிதிக் கையேட்டினை அங்கீகரிக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளமை மற்றும் இந்த கொடுப்பனவுகளை உள்ளடக்கிய நிதிக் கையேடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளமை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) 2009 மார்ச் 09 திகதி டீஎம்எஸ்/ஈ4/10/4/090/2 இலக்கம் கொண்ட சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளரை விழித்துள்ள முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் கடிதம் | | | |
| (i) பந்தி 02-01 | நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தருக்கு தூரத்தின் அளவினை கவனத்தில் எடுத்து போக்குவரத்துப் படி செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தூரத்தின் அளவினை கவனத்தில் எடுக்காமல் 2009 ஆண்டு முதல் மாதாந்தம் முறையே ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 இற்கான போக்குவரத்துக் கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டு முதல் பணிப்பாளர் சபையின் தீர்மானம் ஒன்றின் படி அந்த மாதாந்த கொடுப்பனவு முறையே ரூபா 11,500 மற்றும் ரூபா 6,000 தொகை வரை அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | பணிப்பாளர் சபை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இது வரை வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுக்காக மேவுகை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்தி 02-02 | பதவியணி அங்கத்தவர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்றாக ரூபா 4,000 மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு இணங்காமல் 2011 ஜூலை 01 திகதி முதல் மாதாந்தம் உச்ச மட்டம் ரூபா 12,000 என்ற அடிப்படையில் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஒட்டுமொத்த பதவியணிக்கு உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் போது மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 16,256,313 தொகையும் உட்பட 2011 ஜூலை 01 திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு என மிகையாக செலுத்தியிருந்த தொகை ரூபா 137,490,554 ஆகும். | | |
| (iii) பந்தி 02-03 | (i) நாளாந்த வரவுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு என ஒரு மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 2,000 தொகை மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதனை ரூபா 3,500 தொகை வரை அதிகரித்து செலுத்தப் பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| | (ii)நாளாந்த வரவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்படின் வருட இறுதியில் உள்ள மீதியான விடுமுறை களுக்காக பணம் செலுத்த முடியாது எனினும், தின வரவுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியான விடுமுறை களுக்காக ரூபா 14,359,173 தொகை செலுத்தப் பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) 02-04 ஆம் பந்தி | புதுவருட பிறப்பு மற்றும் நத்தார் பண்டிகை ஆகியவற்றுக்காக வருடமொன்றிற்கு ஒருவருக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா 6,000 ஆன பரிசு சீட்டில்கள் வழங்கப்படக் கூடிய போதிலும் மீளாய்வாண்டினுள் நிரந்தர | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்கு ரூபா 25,000 மற்றும் பயிலுனர் ஊழியர்களுக்கு ரூபா 12,500 படியாக ரூபா 7,179,875 கிரயமான பரிசு சீட்டில்களும் அதற்கு மேலதிகமாக பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 12,500 படி மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 6,250 படி ரூபா 5,037,500 கிரயமான பரிசில் சீட்டில்கள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (v) | 02-06 ஆம் பந்தி | ஏதேனுமொரு உத்தியோகத்தருக்கு உரிய சேவை முறைகள் அனைத்திற்கும் வருகை தந்தால் மாத்திரம் ரூபா 1,000 ஆன மாதாந்த படியொன்றினை செலுத்த இயலுமான போதிலும், பங்குபற்றிய ஒவ்வொரு சேவை முறைக்காகவும் நிறைவேற்றுத் தர, பயலுநர் நிறைவேற்றுத்தர மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற ஊழியர்களுக்கு முறையே ரூபா 400, ரூபா 300 மற்றும் ரூபா 200 படியாக மீளாய்வாண்டினுள் ரூபா 4,891,000 தொகை சேவை முறைப் படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், கூடுதலாக செலுத்தப்பட்ட சேவை முறைப் படி ரூபா 2,575,000 ஆகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 2015 யூன் 04 ஆந் திகதி BP/30/15 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானம் | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் மிதி வண்டி கடன் 2015 யூன் 04 ஆந் திகதி முதல் ரூபா 3,000 முதல் ரூபா 20,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரம் கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

1.7 வரி பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தினால் 2021/2020 மதிப்பீட்டு ஆண்டிற்காக 2021 திசெம்பர் 30 ஆந் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இணையவழி முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரி அறிக்கைகளின் பிரகாரம் சுயமதிப்பீட்டு வரியாக ரூபா 166,941,903 செலுத்தப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினுள் வரி கணிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் பிரகாரம் உள்ளபடியான சுயமதிப்பீட்டு வரி செலுத்துகை ரூபா 166,351,979 மாத்திரம் ஆனமையால் வேறுபாடு ரூபா 589,924 ஆகும். வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனி கட்டமைப்பில் உள்ள கோளாறு காரணமாக இது இடம்பெற்றுள்ளமை, வரி கணிப்பீடு அல்லது கணக்கு வைத்தலில் தவறொன்று இல்லாதிருந்தமை மற்றும் இது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடி சரியான அறிக்கையை பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி அறிக்கைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரி கணிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் குறிப்பிட்ட வேறுபாடு ஒப்பிடப்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,006,185,465 ஆன இலாபமாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,017,364,317 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில், ரூபா 11,178,852 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை மற்றும் பகிர்ந்தளிப்பு செலவினம் 122 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் வரிச் செலவினம் 59 சதவீதத்தினால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான செலவின விடயங்களில் போக்குப் தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் விற்பனைகள் மற்றும் வினியோகச் செலவுகள் முறையே ரூபா 49,137,643 தொகை மற்றும் ரூபா 109,186,789 தொகையாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது அந்த செலவுகள் 122 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதில் அடங்கியிருந்த விற்பனை மேம்பாட்டு கழிவுகள் மற்றும் செலவுகள் 101 சதவீத்தினால் அதிகரித்தமை அதற்கான முக்கிய காரணமாக இருந்ததுள்ளது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரம் முறையே 1.1 சதவீதத்தினால் மற்றும் 0.7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. கடன்பட்டோர் புரள்வு வீதம் 21.4 தவணைகளினால் அதிகரித்திருந்ததுடன் கடன் அறவீடு செய்யும் காலம் 42 நாட்களினால் குறைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுவான பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஒன்று நிறுவும் குறிக்கோளுடன் மொத்தத் தொகை ரூபா 133,767,599 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு நவீன மயப்படுத்தியிருந்த கட்டிடம் ஒன்று 2019 ஆகஸ்ட் 20 திகதி முதல் 2022 மே 27 திகதி வரையும் விளைவற்று மூடப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை நிறுவுவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஏனைய தேவைகள் எதற்கும் கூட்டுததாபனத்தின் முன் திட்டமிடல் அல்லது தயாரித்தல் காணப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கணக்காய்வு அறிக்கை களில் சுட்டிக்காண்பிக்கப் பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளினால் அதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராசாயன ஆய்வுகூடம் மற்றும் பயிற்சி பாடசாலைகளை தாபிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஹொரன புளத்சிங்களயில் அமைந்துள்ள கட்டிடத்தினை விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்காக கூறுவிலைகளை கோருவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளமை மற்றும் 2022 பெப்ரவரி 13 ஆந் திகதி அதற்கான பத்திரிகைகளின் மூலம் அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | கட்டிடத்தின் பயன்பாட்டிற்காக நிச்சயிக்கப்பட்ட திட்டம் ஒன்றின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக கழிவுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாத காரணத்தினால் ரூபா 667,436,317 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களுக்காக மீள் மதிப்பீட்டு பணிகளை நிறைவு செய்து வரைபு அறிக்கைகள் இதுவரையிலும் கிடைத்துள்ளமை மற்றும் இறுதி மீள் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் 2022 ஆம் ஆண்டினுள் கணக்குகளின் உரிய ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படும் என்பது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நடைமுறையல்லாத சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 8,302,287 கிரயமான 101 உருப்படிகள் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக பரிசோதனைக்கு உள்ளாகியிராததுடன் அவ்உருப்படிகள் பற்றாக்குறையாகவும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | பௌதீக பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டிராமை க்கான காரணங்கள் என்ன என்பது நிலையான சொத்துக்கள் குழுவினால் அவதானிக்கப்பட்டவாறு உள்ளமை மற்றும் உரிய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கூட்டுத்தாபனத்தின் அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக வும் பௌதீக பரிசோதனைகளை நடாத்த வேண்டியதுடன் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை அறிந்து அறிக்கையிட வேண்டும். |

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனைத் திட்டம் மற்றும் மாதாந்த உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த மொத்த உற்பத்தி தேவைப்பாடு ஆகியவற்றுக்கிடையே 81 மருந்து வகைகளின் ரூபா 120 மில்லியன் அலகுகளின் வேறுபாடொன்று நிலவியது. | நிலவும் இருப்பு மட்டங்களை கருத்தில் கொண்டு சந்தையின் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு விற்பனை பிரிவின் உற்பத்தி தேவைப்பாடு தயாரிக்கப்படுகின்றமை, குறித்த காலப்பகுதியினுள் களஞ்சியங்களில் காணப்படும் மூலப்பொருள் வகைகள் மற்றும் அவற்றின் அளவுகள், நிலவும் இயந்திரம் மற்றும் அவற்றின் இயலளவுகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ள உற்பத்தி பட்டியல் போன்றவை தொடர்பில் விடயங்களை கருத்தில் கொண்டு மாதாந்த உற்பத்தி திட்டம் தயாரிக்கப்படுகின்றமை மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பது. | வருடாந்த விற்பனைத் திட்டத்தின் இலக்கை அடைந்து கொள்ள உச்ச அளவில் முயற்சி செய்ய வேண்டியதுடன் மாதாந்த உற்பத்தி திட்டங்களும் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | விற்பனைத் திட்டத்தின் படி இனங்காணப்பட்டிருந்த மொத்த உற்பத்தித் தேவை 58 வகையான மருந்துகளில் 1,877 மில்லியன் அலகுகள் ஆன போதிலும், உள்ளவாறான உற்பத்தி 25 வகையான மருந்துகளில் 1,127 மில்லியன் அலகுகள் மாத்திரம் ஆகும். | - மேற்படி - | உச்சமட்ட உற்பத்தி செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வ தன்மையுடன் உற்பத்தி செய்வதற்காக தத்ரூபமான உற்பத்தி மற்றும் விற்பனை திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்திருந்த மருந்து வகைகளில் மாத்திரைகள் சிறிய பகுதிகளாக உடையக் கூடிய இயலுமை அதிகரித்திருத்தல், மருந்து மாத்திரைகளின் பாரத்தில் ஏற்பட்டுள்ள முரண்கள், கவர்ச்சியற்ற தோற்றம் மற்றும் மருந்து மாத்திரைகள் உடைந்து போவதற்கு காணப்பட்ட வசதியின்மைகள் ஆகிய காரணங்களினால் உற்பத்திகளை இடைநிறுத்தி மீண்டும் உற்பத்தி செய்ய நேரிட்டிருந்த காரணத்தினால் ஏற்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 2,749,960 தொகையாக இருந்தது. அனைத்து ஆண்டுகளிலும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஏற்படுகின்ற இந்த சீரற்ற நிலைமைகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனம் மீள் உற்பத்தி செய்வதை குறைத்துக் கொள்வதற்காக Quality Assurance நடைமுறை முக்கியமானது என்பது, இங்கு ஒரே நியமத்துடனான மூலப்பொருட்கள், ஒரே நடைமுறையில் உற்பத்தி ஆகியவற்றின் மூலம் இறுதி உற்பத்தி உரிய தரத்துடன் உள்ளமை தொடர்பில் சான்றுப்படுத்தப் படுகின்ற போதிலும் விலைக்கேள்வி முறை நடைமுறை காரணமாக கொள்வனவு செய்யப்படும் மூலப்பொருட்களின் விலைகள் சில அளவுகளினால் தளம்பலடைகின்றமை, அதனால் உரிய முறையில் Quality Assurance நடைமுறையை பேண முடியாதுள்ளமை மற்றும் அவ்வாறான சூழல் ஒன்றினுள் மீள் உற்பத்தி செய்ய நேர்கின்றமை. | மருந்துகளின் பண்புசார் நிலைமையை அதிகரிப்பதற்காக மற்றும் உற்பத்திச் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச விற்பனை விலையை விஞ்சிய விலைக்கு கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்திருந்த 07 மருந்து வகைகள் உற்பத்திக் கிரயத்தை விட குறைவான விலையில் நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அவற்றுள் 03 மருந்து வகைகள் அவற்றின் உற்பத்திக் கிரயத்தை விட குறைவாக விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 38,593,701 ஆன நட்டம் ஏற்பட்டமை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மருந்துப் பொருட்களிடையே Cloxacillin capsule BP 500mg (Blister) மற்றும் Diltiazem Tablets 60mg (Blister) ஆகிய உற்பத்திகள் இரண்டினதும் திறந்த சந்தை விற்பனைக்காக கேள்வி கிடைத்த போதிலும் அவ் உற்பத்திகளை Blister பொதிகளாக வழங்குவதற்கு உரிய வசதிகள் இல்லாதிருந்த காரணத்தினால் திறந்த சந்தையினுள் விற்பனை செய்ய முடியாதிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் அவ் உற்பத்தியினை திறந்த சந்தையில் அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் கிரயம் மற்றும் சந்தை விலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விலை தீர்மானிக்கப்படும் என்பது. | கூட்டுத் தாபனத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டியதுடன் ஆகக்குறைந்தது உற்பத்திக் கிரயம் உள்ளடக்கப்படும் வகையில் விலை தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டினுள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனைக்காக திட்டமிடப்பட்டிருந்த விற்பனை பெறுமதி ரூபா 2,714,300,224 பெறுமதியான 72 மருந்து வகைகளின் 1,202 மில்லியன் அலகுகளின் விநியோக இலக்குகளை அடைந்து கொள்ள | விற்பனைத் திட்டத்தினை நிறுவனத்தின் எதிர்வரும் வருடத்தின் திட்டமிடும் பணிகளுக்காக வழிகாட்டியாக கொள்வதுடன் அது ஒரு அண்ணளவான மதிப்பீடு மாத்திரம் என்பது, விற்பனை திட்டம் அவ்விதத்திலேயே அடைந்து கொள்ள முடிாயாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை, மற்றும் ஏதேனும் | நடைமுறைக்குச் சாத்தியமான வருடாந்த விற்பனைத் திட்டங்களை தயாரிக்க வேண்டியதுடன் உரிய சந்தர்ப்பங்களில் அதன் முறையான அங்கீகாரத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்தது. அவற்றுள் விற்பனை பெறுமதி ரூபா 558,481,531 ஆன 375.7 மில்லியன் அலகுகளின் விற்பனை இலக்குகளில் எதிர்பார்க்கப்பட்டிருந்த 18 மருந்துப்பொருள் உருப்படிகளின் மொத்த விநியோகம் மற்றும் விற்பனைப் பெறுமதி ரூபா 66,007,940 ஆன 465.4 மில்லியன் அலகுகளின் விற்பனை இலக்குகளில் எதிர்பார்க்கப்பட்டிருந்த 6 மருந்து உருப்படிகளின் 50 சதவீதமான விநியோகத்தினை பூர்த்தி செய்ய கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | ஒரு சதவீதத்தினால் இந்த பெறுமதிகளில் உயர்வு அல்லது வீழ்ச்சியோ இடம்பெற முடியும் என்பது. | அடிப்படையில் திருத்த வேண்டியதுடன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உச்ச அளவில் முயற்சி செய்ய வேண்டும். |
| (ஊ) | மூலப்பொருள் இல்லாதிருந்தமை, இயந்திரங்களின் இயலளவு போதுமானதாக இல்லாதிருந்தமை, உற்பத்தி நடைமுறையில் நிலவிய தொழில்நுட்ப கோளாறுகள் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்டிருந்த மருந்துப் பொருட்களின் விற்பனைப் பெறுமதி ரூபா 1,927,233,717 ஆன மருத்துவ மருந்துகளின் 785 மில்லியன் அலகுகளை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிலவும் சிக்கலான நிலைமையை குறைத்துக் கொண்டு மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கு உச்ச இயலளவுடன் நடவடிக்கை எடுத்து தமது சந்தைப் பகுதியை பாதுகாக்க வேண்டும். |
| (எ) | கூட்டுத்தாபனம் தமது உச்ச இயலளவுடன் செயற்பட்டிராத காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 5,300,782,520 பெறுமதியான 2,076 மில்லியன் அலகு மருந்துகளுக்கிடையே கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளிலிருந்து விற்பனை பெறுமதி ரூபா 2,140,206,445 ஆன 1,338 மில்லியன் அலகு மருந்துகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த துடன் எஞ்சிய ரூபா 3,160,576,075 விற்பனைப் பெறுமதியான 738 மில்லியன் மருந்து அலகுகள் துணை வியாபார | இணைப்பு வியாபாரங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான உற்பத்திகளுக்கு ஒப்பாக குறைந்த அளவிலான மற்றும் உயர் கிரயத்துடனான உருப்படிகள் என்பது மற்றும் உத்தேசிக்கப்பட்ட Lotus Pharma Project மருந்து உற்பத்திக் கூடத்தினுள் எம்மால் அதிக கிரயத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை உற்பத்தி செய்தல் தொடர்பில் இதுவரையிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை. | கூட்டுத்தாபனம் தமது உச்ச உற்பத்தி செயற்திறனுடன் செயற்பட்டு மிகவும் இலாபகரமான உற்பத்தி கலவையை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகங்களின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளுக்காக 2021 நவம்பர் 11 ஆந் திகதி முதல் 2021 நவம்பர் 31 ஆந் திகதி வரையான 03 வார காலப்பகுதியில் மாத்திரம் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்ட 50 வினியோகத்தர்களின் கட்டளைகளுக்குரிய விற்பனை வருமானம் ரூபா 85,707,417 ஆன மருந்து பொதிகளின் 136,964 அலகுகளை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | போதிய உற்பத்தி இயலளவு கூட்டுத்தாபனத்தில் காணப்படாமையால் மீளாய்வாண்டினுள் விநியோகத்தர்களின் மொத்த கேள்வியினை நிறைவு செய்ய முடியாதிருந்தமை மற்றும் தொடர்ந்தும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதன் ஊடாக விற்பனை பிரிவிற்கு உயர்ந்த விற்பனை இலக்குகளை அடையக் கூடியமை. | வழங்கலினை வழங்கக்கூடிய முறையில் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலவும் இருப்புக்கள் தொடர்பில் தொடர்ச்சியான கண்காணிப்புடன் செயற்பட்டு கட்டளைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டினுள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 444,538,751 விற்பனை பெறுமதியான 988,283 மருந்து பொருட்களின் உறைகளை விநியோகிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் அவற்றுள் விநியோகிப்பதற்கு இயலுமானதாக இருந்தது 30 சதவீதத்தை விட குறைவான அளவே ஆகும். | கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவு போதுமானதாக காணப்படாமை, SPC இன் மூலம் வழங்கப்படும் கட்டளைகள் அவ்வவ்போது மாற்றமடைந்தமையால் சில சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளின் போதிய இருப்பு இல்லாதிருந்தமை மற்றும் அவசர கோரிக்கைகளை போதியளவில் வழங்குவதற்கு முடியாதிருந்தமை போன்ற விடயங்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த விற்பனை இலக்குகளின் ஊடாக அடைந்து கொள்ளாதிருந்தமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | கேள்விக்கு பொருத்தமான வழங்கலை வழங்குவதற்கு இயலுமான வகையில் உற்பத்தி இயலளவை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | விற்பனை பிரிவினுள் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் விற்பனை நடைமுறை கட்டமைப்பு (Sales Process) இற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அப்பிரிவிலிருந்து விநியோகிக்கப்படும் பட்டியல்கள் வாயிலின் அனுமதிப்பத்திர இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் சில பட்டியல்கள் அங்கீகாரம் வழங்கப்பட்டிராததுடன், சில பட்டியல்களை பரீட்சித்தமைக்காக கையொப்பமிடப்படாதிருந்த போதிலும் அவை அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | விற்பனை பிரிவினுள் தற்போது விற்பனை நடைமுறைக் கட்டமைப்பு இல்லாதிருந்தமை, தற்போது நடைமுறைக்குச் சாத்தியமான முறையில் பயன்படுத்தப்படும் விற்பனை நடைமுறையின் உத்தேசத் திட்டம் மாத்திரம் கணக்காய்வு பிரிவின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டமை, 03 பட்டியல்கள் அங்கீகரித்தல் தவறவிடப்பட்டுள்ளமை, மீண்டும் அவ்வாறு இடம்பெறாதிருக்குமாறு செயற்படுவதற்கு மற்றும் 2022 ஆம் ஆண்டினுள் இந்த அனைத்து குறைபாடுகளையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | விற்பனை நடைமுறைக் கட்டமைப்பினை தயாரித்து அங்கீகரித்து செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலான காலப்பகுதியினுள் 24 பொருள் விடுவிப்பு கம்பனிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 853,500 ஆன விடுவிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீள அறவிடுவதற்கு தவறியிருந்தது. | குறித்த தரப்பினருக்கு அறிவித்து இந்த வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | விடுவிப்பு நிறைவடைந்தவுடன் உடனடியாக வைப்புக்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டினுள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த விற்பனைகளுக்கு உரிய கணனி கட்டமைப்பின் மூலம் தயாரிக்கப்படும் விற்பனை கிரய பட்டோலையினுள் 04 விற்பனைக் கட்டளைகளின் மாதிரிக்குரிய பொருட் கிரயம், ஊழியக் கிரயம் மற்றும் பொதுமேந்தலைக் கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 38,182,618 ஆன போதிலும் விற்பனை கட்டளை கிரயத்திற்கு (Sales Order Value) பிரகாரம் அது ரூபா 52,400,228 ஆனமையால் வேறுபாடு ரூபா 14,217,610 ஆகும். வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | விற்பனை கிரயத்திற்காக கணனி கட்டமைப்பில் பேணப்படும் தனியானதொரு Module ஒன்று என்பது, சில சந்தர்ப்பங்களில் விற்பனை மீள் திருப்பதல்கள் கணக்கு வைக்கப்படும் போது பேரேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதிலும் விற்பனைக் கிரய கட்டமைப்பில் சரியாக பதிவு செய்யப்படுவதில்லை என்பதும் சில சந்தர்ப்பங்களில் குறித்த கணனி கம்பனிக்கு அறிவிப்பதன் பின்னர் அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கட்டுப்பாட்டு உபாய மார்க்கங்களாக பேணிச் செல்லப்படும் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் உரிய அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளுக்கு இடையே ஏற்படும் தொகை அடிப்படையிலான வேறுபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராய்ந்து இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் ரூபா 127,517,807 செலவிடப்பட்டு மருந்து மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் போன்றவற்றை கொள்வனவு செய்த 04 சந்தர்ப்பங்களில் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 வழிகாட்டிகளின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்றும் பெறுகைகள் கால அட்டவணை ஆகியவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 6.3.3(அ) வழிகாட்டியின் பிரகாரம் விலைக்கேள்வி திறக்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டிராததுடன் 6.3.6 வழிகாட்டியின் பிரகாரம் விலைக்கேள்வி திறத்தல் தொடர்பில் உரிய | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 வழிகாட்டிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் கால அட்டவணை இத்துடன் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, 6.3.3 மற்றும் 6.3.6 வழிகாட்டிகளின் பிரகாரம் ஏற்பட்டிருந்த குறைபாடுகளை திருத்தி கேள்வி திறப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய முறையில் அறிக்கைகள் கைச்சாத்திடப்படுகின்றமை மற்றும் செயலாற்றல் பிணை முறிக்காக பணிப்பாளர் சபையின் | அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் உரிய மாதிரிப் பத்திரங்களில் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்திற்கு முன்னர் வழங்குனருக்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் பொது ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தத்தை பதிவு செய்தசான்றிதழ் வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. 5.4.10(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்கமைய மொத்த கொடுப்பனவில் 10 சதவீதத்தினை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் ரூபா 11,068,650 கிரயமான பரசிட்டமோல் DC 90 மூலப்பொருள் 6,000 கிலோகிராம்கள் மூன்று வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் குழுவினால் வழங்குனர்களின் கேள்வி மாதிரிகள் கூட்டுத்தாபனத்தின் இரசாயன ஆய்வுகூடத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான மாதிரி பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் இவ்வழங்குனர் மூவரும் உரிய மூலப்பொருளின் முன்வழங்குனர்கள் அல்ல என்பதுடன் அவர்கள் மூவரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்துகை அதிகார சபையில் பதிவு செய்திருக்கவில்லை. கூட்டுத்தாபனத்தின் பட்டியல் அபிவிருத்தி மற்றும் உற்பத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த இயந்திர முன்பரிசோதனையில் சித்தியடைய வேண்டிய Disintegration time, Less moisture content, Less flow ability, Friability and Compressibility ஆகிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் இரு வழங்குனர்கள் விநியோகித்திருந்த மூலப்பொருட்கள் தோல்வியடைந்திருந்ததுடன் ஒரு வழங்குனரின் இயந்திர முன்பரிசோதனை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மூலப்பொருட்களின் மாதிரிகளை விலைக்கேள்வி மதிப்பீட்டிற்கு முன்னர் பரீட்சித்து தரம் தொடர்பில் | தற்போது Paracetamol DC 90 மூலப்பொருளை விநியோகிக்கும் உற்பத்தியாளர்கள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்துகை அதிகார சபையில் பதிவிற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மருந்துப் பொருட்களின் தரம் தொடர்பில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணம் சரியாக அல்ல என்பது, மருந்தொன்றின் தரம் என்பது நோயாளியொருவர் நோய்க்குள்ளாகி உள்ள சந்தர்ப்பத்தில் மருந்தில் காணக்கூடிய நியமம் என்பது, இயந்திர உற்பத்தியில் ஏற்படும் சிக்கல்கள் உற்பத்தி நடைமுறையில் உருவாகும் தடைகள் என்பது மற்றும் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் பரசிட்டமோல் மருந்தின் அதிக தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு மூலப்பொருட்களின் தரம் 100 சதவீதம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தரக் கட்டுப்பாட்டு பிரிவினால் மருந்து உற்பத்திக்காக மூலப்பொருட்கள் விடுவிக்கப்பட்டது என்பது. | மருந்துப் பொருட்கள் மற்றும் வைத்திய உபகரணங்கள் தொடர்பிலான அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன் பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளை போன்றே கட்டளை நிபந்தனை களுக்கும் இணங்கும் வகையில் பின்பெறுகை நடவடிக்கைகளும் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பகுப்பாய்வு அறிக்கையின் மாத்திரம் கூட்டுத்தாபனத்தின் தரக்கட்டுப்பாட்டு பிரிவினால் மருந்து உற்பத்திக்காக அம்மூலப்பெருட்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | Levothyroxine sodium DC granules மூலப்பொருளின் 50 கிலோகிராம்கள் (Manufacturing of pilot batches) ரூபா 689,648 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த கட்டளைகள் கட்டளை நிபந்தனைகளுக்கு இணங்க மூலப்பொருட்கள் நாட்டிற்கு கிடைத்த நாள் முதல் 2½ வருட உயிரியல் காலம் காணப்பட வேண்டிய போதிலும் கிடைத்திருந்த மூலப்பொருட்களின் உயிரியல் காலம் அவை கிடைத்த திகதியிலிருந்து 05 மாதங்கள் மாத்திரம் ஆகும். இது தொடர்பில் வழங்குனரிடம் விசாரித்தல் அல்லது மூலப்பொருட்களை மீள பெற்றுக்கொள்ளாது வழங்குனர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கூற்றில் (Declaration Letter) அடிப்படையாகக் கொண்டு இந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருந்த Levothyroxine Tablets 1P 50 mcg மருந்தின் உயிரியல் ஆயுட்காலம் 02 வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது. | அடிப்படையில் 06 மாத உயிரியல் காலத்துடன் வழங்கல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனை 02 வருடங்கள் வரையிலும் தரத்தை பரிசோதித்து உற்பத்தி செய்ய முடியும் என்பது, அந்த மருந்துப் பொருட்களின் உற்பத்தியாளர்களால் தீர்மானிக்கப்பட்டமை, மருந்துப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவது தரக்கட்டுப்பாட்டு பிரிவின் முழுமையான கண்காணிப்பு மற்றும் அங்கீகாரத்தின் கீழ் என்பது, இரு வருடங்களுக்காக தர உறுதிச்சான்றிதழ்கள் (Quality Assurance Certificate) உற்பத்தியாளரால் வழங்கப்பட்டுள்ளமை, குறித்த மூலப்பொருளின் உயிரியல் காலம் இலங்கைக்கு கிடைத்த திகதியிலிருந்து 05 மாதங்கள் என்பது உண்மையான போதிலும் இந்த மூலப்பொருளை பயன்படுத்தி உயிரியல் காலத்துடனான மாத்திரைகளை உற்பத்தி செய்ய முடியும் என்பது மற்றும் இருவருட காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது முடுக்கல் நிலைப்பாட்டு பரிசோதனை (Accelerated Stability Studies) மேற்கொண்ட பின்னரே ஆகும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Flucloxacillin Sodium BP மூலப்பொருளின் கிரயம் ரூபா 23,331,831 கிரயமான 3,000 கிலோகிராம்கள் உரிய நியமமின்றி காணப்பட்டதாக கூட்டுத்தாபனத்தின் தரக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் 2021 | நிராகரிக்கப்பட்ட மூலப்பொருள் இருப்பிற்கு உரிய பெறுமதியை கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துவதற்கு வழங்குனர் இணங்கியுள்ளதமை, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை மற்றும் | மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பிலான அரச பெறுகைகள் வழிகாட்டிக் |

| | | |
|---|---|---|
| யூன் 25 ஆந் திகதி நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 7 ஆந் திகதி வரையிலும் இந்த மூலப்பொருட்களின் இருப்பினை மறுப்பதற்கு அல்லது வழங்குனரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு அல்லது வழங்குனருக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பெறுகைக்குரிய ரூபா 6,999,549 ஆன செயலாற்றல் பிணைமுறி 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் அதற்கு முன்னர் அதனை காசாக்குவதற்கு அல்லது அதனை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பிணை முறியை நாளதுவரையாக்கி இல்லாதிருந்தமை மற்றும் இயலக் கூடிய விரைவில் இருப்பு மீள் நிறுவுவதற்கு அல்லது குறித்த கிரயத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கோவையின் பிராகரம் செயற்பட வேண்டியதுடன் பெறுகைகள் குழுவின் பரிந்துரைகளை போன்றே கட்டளைகளின் நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் பின் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

3.4 கூட்டு முயற்சி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்நாட்டில் மருந்துகள் உற்பத்தி செய்யும் செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுத்தமாக தனியார் முதலீட்டாளர் கடன் பங்குடைமையை ஆரம்பிப்பதற்கான திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் சாத்தியமான 17 மூதலீட்டாளர்களுடன் மருந்துகள் வழங்குவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 முதலீட்டாளர்களிடம் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 17 முதலீட்டாளர்களுடன் துணை வியாபாரத்திற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் இரு முதலீட்டாளர்கள் மாத்திரம் கைத்தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படவில்லை என மற்றும் எஞ்சிய 15 முதலீட்டாளர்களிடையே 4 முதலீட்டாளர்களினால் மாத்திரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகிப்பதற்கு உரிய உற்பத்திக்கூட வசதிகள் மற்றும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை. | உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள ஏனைய முதலீட்டாளர்களை ஊக்குவித்து துணை வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) கூட்டு முயற்சிகளிலிருந்து மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த மருந்துகள் மற்றும் அறுவைச் சிகிட்சை பொருட்களின் 56 உருப்படிகளின் 21 உருப்படிகளுக்காக மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் தரப் பரிசோதனைகள் | அந்த உருப்படிகளின் தரப்பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் பகுப்பாய்வு பணிகள் மேற்கொள்ளப்படும் விஞ்ஞான உபகரணங்களுக்குத் தேவையான நுகர்வு உதிரிப்பாகங்கள் (Consumables Spare Parts) பெற்றுக் | துணை வியாபாரங்களின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப் படும் மருந்துகளின் தரம் தொடர்பில் போதிய சுயாதீனமான |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய 35 உருப்படிகளின் தரப்பரிசோதனையை மேற்கொள்ள கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகித்திருந்தது. இவற்றிடையே அறுவைச் சிகிட்சை பயன்பாட்டு பொருட்களின் 03 உருப்படிகள் ஒரு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் உருப்படிகளின் தரப் பரிசோதனை செய்வதற்கு உரிய வசதிகள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படாத காரணத்தினால் வழங்குனர் நேரடியாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) இற்கு மாதிரிகளை அனுப்பி பெற்றுக் கொண்டிருந்த தரப் பரிசோதனையின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை. அதற்கமைய துணை வியாபாரங்களின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்படும் மருந்துகளின் தரம் தொடர்பில் போதிய சுவாதீனமான சான்றுறுதியொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு முழுவதும் நிலவிய Covid 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் முடியாதிருந்தமை, அறுவைச் சிகிட்சை நுகர்வு உருப்படிகளுக்காக ITI நிறுவனத்திற்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டமை மற்றும் அதற்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்த பின்னர் 2022 ஆம் ஆண்டு முதல் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் இராசாயன ஆய்வுகூடத்தில் மேற்குறிப்பிடப்பட்ட தரப் பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சான்றுறுதிப்படுத்தல் ஒன்று கூட்டுத் தாபனத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | கூட்டு முயற்சிகளுக்கான உடன்படிக்கை கைச்சாத்திட்ட முதலீட்டாளரினால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் அறுவை நுகர்வுப் பண்டங்கள் உற்பத்தி கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையொன்று கூட்டப்பட்டு விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறான ஒரு முதலீட்டாளரிடம் பெறப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 01 மருந்து விடயங்களின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 6,262,252 தொகையாக காணப்பட்டது. முதலீட்டானரினால் அந்த உருப்படி ரூபா 6,112,800 இற்கு கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தினால் அந்த பட்டியல் பெறுமதிக்கு மேலும் ரூபா 2,235,696 ஆன சேவைக் கட்டணம் சேர்க்கப்பட்டு ரூபா 8,348,496 இற்கு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை | கூட்டுத்தாபனம் மற்றும் துணை வியாபாரங்களினால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்படும் விலையினை தீர்மானிப்பதற்காக நடாத்தப்படும் விலைக் குழுக் கூட்டம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படுகின்றமை, இந்த மருந்தின் விலை 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி இடம்பெற்ற விலைக் கழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை, உற்பத்தி பொதியொன்றின் விலை ரூபா 173,927 ஆன போதிலும் இந்த மருந்தின் மூலப்பொருளின் விலை வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் துணை வியாபாரங்களினால் பொதியின் அலகொன்றின் விலை ரூபா 127,350 வரையிலும் குறைக்கப்பட்டுள்ளமை மற்றும் குறைக்கப்பட்ட விலைக்காக மீண்டும் விலைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள போதிய காலம் | அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப் பட்டவாறு மருந்துப் பொருட்கள் மற்றும் அறுவைச் சிகிட்சை நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக் கிரயத்திற்கு 20 சதவீத இலாப எல்லையை சேர்த்து விற்பனை விலை தீர்மானிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. அந்த மருந்து உருப்படிகளின் உற்பத்திக் கிரயத்தின் 33 சதவீதமான இலாப வீதம் முதலீட்டாளரினாலும், கொள்வனவு விலையில் 37 சதவீதம் இலாப மற்றும் சேவைக் கட்டணங்கள் கூட்டுத்தாபனத்தினாலும் அறவிடப்பட்டிருந்தது. | இல்லாதிருந்தமை. | |
| (ஈ) | கூட்டு வியாபாரத் திட்டத்திற்காக கொள்வனவு விலையில் 6 சதவீத இலாப எல்லை சேர்க்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் விநியோகிக்கப்படும் கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் துணை வியாபாரங்களினால் கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்ட மருந்துப் பொருட்களின் கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு விலைக்கு 17 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையிலான இலாப வீதம் ஈட்டப்பட்டிருந்தது. | 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி இடம்பெற்ற விலைக்குழுக் கூட்டத்தில் குறித்த மருந்துப் பொருட்களின் விலைகள் மாற்றமடைந்தமைக்கு உரியதாக அவர்களால் வழங்கப்பட்ட கிரய பத்திரங்களின் பிரகாரம் அவர்களின் பட்டியல்கள் மாற்றப்பட்டிராமை. | அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருந்த கொள்கைகளின் பிரகாரம் குறித்த கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டு வியாபார மும்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ குழு (Official Committee) இனால் பரிந்துரைக்கப்பட்டவாறு முதலீட்டாளர்களின் உற்பத்தி நடைமுறையின் தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட வேண்டியதுடன் அதற்காக அந்த முதலீட்டாளரின் வியாபார பங்குகளின் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் கூட்டுத்தாபனத்தினால் தற்போது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் இரு முதலீட்டாளர்களினால் மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு பங்கு வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய முதலீட்டாளர்கள் இருவரினால் 2022 மே 30 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு தமது பங்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அந்த முதலீட்டு கம்பனிகளுக்கான பணிப்பாளர்களை நியமிப்பதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அந்த நிறுவனங்களும் பங்குச்சான்றிதழ் வழங்குவதற்குரிய ஆவணங்களை தயாரித்தவாறு உள்ளமை. | அமைச்சரவை யினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட வாறு செயற்பட வேண்டும். |

3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இரு கட்டிடங்களை இணைக்கும் உத்தேச மேம்பால நிர்மாணங்களுக்காக 2022 மே 27 ஆந் திகதி வரையிலும் ரூபா 6,016,902 செலவிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்களுக்கு பின்னர் நிர்மாணங்கள் பொருத்தமற்றது என தீர்மானிக்கப்பட்டு நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு கட்டுப்பாட்டு அதிகார சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை செலவிடப்பட்டிருந்த தொகை விளைவற்ற செலவினமானதற்கு காரணமாக அமைந்திருந்தது. | உற்பத்தியை விரிவாக்கும் செயற்திட்டமொன்றாக இரு வலயங்களுக்கிடையே பொருட்களின் பரிமாற்றத்தினை செயற்திறனாகவும் உரிய நியமத்துடனும் நிறைவேற்றும் நோக்கில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பின்னர் கருத்தில் கொள்ளப்பட்ட போது இந்த இரு வலயங்களுக்கிடையே பொருட்களை பரிமாற்றம் செய்தல் அத்தியாவசியம் என்பதால் இந்த மேம்பாலத்தினை நிர்மாணித்தல் பயனுள்ளதாக அமையாது என்பது மற்றும் நடைமுறையை கருத்திற் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நிர்மாணத்தை நிறுத்த நேர்ந்துள்ளமையால் அது விளைவற்ற செலவினமொன்றாக கருதுதல் தவறானது என்பது. | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி இந்தச் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு பங்களிப்பு செய்த பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை கண்டறிதல் மற்றும் செலவிடப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நான்கு மாடி நிர்வாகக் கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 27,550,136 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட புவிசார் துளையிடல் Filling பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் 2018 மார்ச் 07 ஆந் திகதி அந்த Filling பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 31 ஆந் திகதியளவில் 04 வருடங்களுக்கு அண்மிய காலம் கடந்திருந்த போதிலும் இக்கட்டிடத்தின் நிர்மாணங்களுக்காக பொருத்தமான ஒப்பந்த நிறுவனமொன்றினை தெரிவு செய்வதற்கும் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கும் கூட்டுத்தாபனம் தவறியிருநதது. | ஆகக்குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த விலைக்கேள்வியாளரின் கூறுவிலைகள் பொறியியல் மதிப்பீட்டிற்கு விட குறைவடைந்தமையும், இந்த விலைக்கேள்வியாளரால் 2019 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த நான்கு மாடிக் கட்டிடத்தின் குறைபாடுகள் காணப்பட்டமை மற்றும் நியமங்களுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டிராமை ஆகிய காரணங்களால் இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளமை மற்றும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கும் எஞ்சிய கட்டங்களே நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய மதியுரைக் கம்பனியின் சேவையை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | நிர்வாக அலுவல்களுக்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்விடயங்களை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போலவே மேற்பார்வை செய்வற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முடிவு மருந்துப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு இரு மாடிகளைக் கொண்ட களஞ்சிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 மார்ச் 31 ஆந் திகதியளவில் இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 36,943,060 செலவிடப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் நிர்மாணங்கள் தொடர்ந்தும் தாமதமடைந்திருந்ததுடன் நிர்மாணக் கம்பனிகளால் பின்னர் வழங்கப்பட்டிருந்த செயற்திட்ட செயலாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் 2022 மே 17 ஆந் திகதி வரையிலும் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான காலநீடிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டளவில் கூட்டுத்தாபனத்திற்கு அரசாங்கத்திடமிருந்து அறவிட வேண்டியிருந்த பணம் தாமதமாக கிடைத்த காரணத்தினால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதமையால் மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் தாமதமடைந்தமை, பொறியியல் பணிகள் தொடர்பிலான மத்திய உசாத்துணை பணியகத்தினால் இந்த கட்டிடத்தின் கட்டமைப்பு மீள பகுப்பாய்வு செய்யப்பட்டமை, அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கியரத்தினுள் நிர்மாணக் கம்பனியினால் செயற்திட்டத்தை மேற்கொள்ள இணங்கியிருந்தமை, நிர்மாணத் துறையில் ஏற்பட்ட பாரிய விலை அதிகரிப்புக்கள் காரணமாக திட்டத்தை மாற்றியமைத்து ஏற்படுத்தப்பட்டுள்ள இணக்கப்பாடு காரணமாக பாரிய நிதி சிக்கலொன்றுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்துள்ளமை மற்றும் 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் பணிகளை நிறைவு செய்வதற்கு நிர்மாணக் கம்பனி இணங்கியுள்ளமை. | - மேற்படி - |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 423 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 326, வெற்றிடமான பதவியணி 97 ஆகவும் காணப்பட்டது. எனினும் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் உற்பத்தி நடைமுறைக்கு மிகவும் முக்கிய பிரிவான பட்டியல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினை போன்றே தரக்கட்டுப்பாட்டு | துறையின் பிரதான 02 பதவிகளுக்காக 2020 செப்தெம்பர் 20 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை, நேர்முகப் பரீட்சைகளுக்கு தகைமை பெற்று விண்ணப்பதாரர்கள் 2021 திசெம்பர் 01 ஆந் திகதி இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைகளுக்கு வருகை தந்திராமை, அந்த இரு | ஆட்சேர்ப்பு நடைமுறைக் கமையவும் முறையான அவசியமான பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கான பிரதான 02 பதவிகள் உள்ளடங்கலாக நிறைவேற்று தரத்திலான 17 பதவிகள், நிறைவேற்றுத் தரமற்ற தரத்தினால் 48 பதவிகள் மற்றும் சிற்றூழியர் பதவிகள் 30 எனுமாறு 95 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவிகளுக்காக 2021 திசெம்பர் 12 ஆந் திகதி பத்திரிகை மூலம் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டமை மற்றும் எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஆ) | 07 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள 2022 மே 27 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது. | 04 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்து சமர்ப்பித்துள்ளமை மற்றும் எஞ்சிய 03 பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளவாறு உள்ளமை. | ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று நடவடிக்கை எடுத்திராததுடன் அதில் உள்ளடங்கியிருந்த உற்பத்தி, மனிதவளம், விற்பனை, உள்ளக கணக்காய்வு மற்றும் பட்டியல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்களங்களின் உரிய செயற்பாடுகளுக்காக எந்த நிதி ரீதியான பெறுமதியும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து செயற்பாடுகளுக்கான நிதி பெறுமதிகளை உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை உரிய முறையில் தயாரித்து உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், காலப் பகுதியுள் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு | 2021 ஆம் ஆண்டின் செயல் திட்டம் பீஈடீ 12 சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றும் 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளின் செயலாற்றலின் | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் தேர்வு முறைகளை (Key Performance Indicators) உட்படுத்தி செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியருந்த செயற்பாடுகளில் செயலாற்றல் தேர்வு முறைகள் அறுதியாக, போதியளவினதாக அளவீடு செய்யக் கூடிய மட்டத்தில் காட்டியிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ளும் முன்னேற்றத்தை அறுதியாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | அளவீடுகளை திட்டவட்டமாகவும் பொருண்மையாகவும் உள்ளடக்கப்படும் என்பது. | |
| (இ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 515.5 மில்லியனிற்கான 27 செயற்பாடுகளில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 19 மில்லியனான 06 செயற்பாடுகளுக்காக மற்றும் கிரயம் மதிப்பிடப்படாத 27 செயற்பாடுகளை மீளாய்வாண்டின் போது ஆரம்பித்திருக்காததுடன், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 473 மில்லியனான 10 செயற்பாடுகள் மீளாய்வாணடின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மூன்று திணைக்களங்களுக்கான செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது நெருங்கியிருந்த பௌதீக முன்னேற்றத்தினை வெளிப்படுத்தியிருக்க வில்லை. | சுகாதார அமைச்சிலிருந்து அனுப்பப்பட்டிருந்த படிவத்தின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது நிதி முன்னேற்றத்தை அளவிடக்கூடியதாக இருந்தது. குறிப்பிட்ட படிவத்தில் காட்டப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் சதவீதப்படி எனக் காட்டப்பட்டிருந்த வரிசையின் படி எனவும், மற்றும் அதன்படி பௌதீக முன்னேற்றத்தின் சதவீதப்படியான பெறுமதியின் மூலம் எவ்வளவு நிதி முன்னேற்றம் காணப்படுகின்றது என அளவீடு செய்யக்கூடியாத இருந்தது என. | - மேற்படி - |